இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 307 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 03 – செவ்வாய்க்கிழமை 17 ஜூன் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 307 : Thiruvalluvar Year - 2056 - Aani 03 - Tuesday 17 June 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00





பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக திருச்சிக்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (15.06.2025) திருச்சி விமான நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## தஞ்சை செழிக்கட்டும்!

# உழவர் பெருமக்கள் வளம் காணட்டும்!

### கல்லணை திறப்பு குறித்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னைன, ஜூன் 17 -**

**"பொன்னி நதியால் தஞ்சை செழிக்கட்டும்! உழவர் பெருமக்கள் வளம் காணட்டும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்லணை திறப்பு குறித்து தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

*காவிரி டெல்டா பாசனத்திற்காக கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட்ட பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-*

**“காடுகொன்று நாடாக்கிக் குளந் தொட்டு வளம்பெருக்கிப் பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி” எனப் பட்டினப்பாலை பாடும் கரிகாற்பெருவளத்தான் உருவாக்கிய கல்லணையில் நீர் திறக்கப்பட்டது!**

**பொன்மணியென நெல்மணி விளைந்திடப் புறப்பட்ட பொன்னி நதியால் தஞ்சை செழிக்கட்டும்! உழவர் பெருமக்கள் வளம் காணட்டும்!**

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.*

## முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து – புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி

# தஞ்சையில் 2.25 லட்சம் பயனாளிகளுக்கு நல உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!



**தஞ்சை, ஜூன் 16 -**

**தஞ்சையில் நேற்று (16.6.2026) முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தும் - புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 2.25 லட்சம் பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.6.2025) மாலை, தஞ்சை மாவட்டம் கல்லணையில் இருந்து டெல்டா மாவட்ட சாகுபடிக்காக தண்ணீரை திறந்து வைத்தார்.

இதையடுத்து, அங்கிருந்து தஞ்சை வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரம்மாண்ட ரோடு ஷோவில் பங்கேற்றார்.

தஞ்சை மணிமண்டபம் அருகில் இருந்து மேரிஸ் கார்னர், ரயில் நிலையம் வழியாக ரோடு ஷோ மூலம் நடந்து சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சாலையின் இருபுறமும் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களை சந்தித்து அவர்களுடன் அளவளாவினார்.

இப்பிரமாண்ட ரோடு ஷோவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்து முதல்வர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பளித்தனர்.

**முத்தமிழறிஞர் கலைஞர் சிலையை முதல்வர் திறந்து வைத்தார்!**

பின்னர், பழைய பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இதைத்தொடர்ந்து, தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் துரை.சந்திரசேகரன் இல்லத் திருமண விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.6.2025) காலைபங்கேற்றுமணமக்களை வாழ்த்தி உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து, மன்னர் சரபோஜி அரசு கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று, ரூ.325.96 கோடியில் 2,461 முடிவுற்ற திட்டப் பணிகளை முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

ரூ.309.48 கோடியில் 4127 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும் ரூ.558.43 கோடியில் 2,25,383 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

முதலமைச்சரின் வருகையையொட்டி, தஞ்சை மாநகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

**திருச்சியில் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!**

முன்னதாக திருச்சி வருகை தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தி.மு.க. முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில், தெற்கு மாவட்டச் செயலாளரும், பள்ளி கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் ஏராளமான தி.மு.க.வினர் முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. ஆகியோரும் முதலமைச்சர் அவர்களை வரவேற்றனர்.

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, கோவி.செழியன், சிவ.வீ.மெய்யநாதன், எஸ்.எஸ்.சிவசங்கர், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன், தாட்கோ தலைவர் இளையராஜா, டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.கல்யாணசுந்தரம், கவிஞர் சல்மா, சுதா, அருண் நேரு, முரசொலி, திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., மாநகர மேயர் அன்பழகன், தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் துரை சந்திரசேகரன், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஸ்டாலின் குமார், கதிரவன், சௌந்தர பாண்டியன், பழனியாண்டி, அண்ணாதுரை, நீலமேகம், அசோக்குமார், முத்து ராஜா, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் திரண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## திராவிட மாடல் ஆட்சியின் சாதனை! – கல்வியில்

# 4 ஆண்டுகளில் இடைநிற்றலே இல்லாத தமிழ்நாடு!

### ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்பதை உறுதி செய்வோம்’ என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, ஜூன் 17 –

தமிழ்நாட்டை கடந்த நான்கு ஆண்டுகளில் இடைநிற்றல் இல்லாத மாநிலமாக உயர்த்தியுள்ளோம் என்றும், ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்பதை உறுதி செய்வோம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு: –

**வாழ்த்துகள் விருதுநகர் மாவட்ட ஆட்சியர்,**

**கடந்த 4 ஆண்டுகளில் ‘இடைநிற்றலே இல்லாத’ மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்தியுள்ளோம்! இந்த நிலை தொடர அர்ப்பணிப்போடு பணியாற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் வாழ்த்துகள்!**

**ஆசிரியர்களுக்கும், பொதுமக்களுக்கும் என் வேண்டுகோள்: இந்த இயக்கத்தில் நீங்களும் இணைய வேண்டும்! உங்கள் பகுதியில், பள்ளி செல்லாத மாணவர்கள் இருந்தால் கண்டறியுங்கள். ‘கல்வியை மிஞ்சிய செல்வம் எதுவும் இல்லை’ என அவர்களுக்கு உணர்த்துங்கள்.**

**காலை உணவுத் திட்டம், திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classrooms), நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் என ஒவ்வொரு நிலையிலும் அவர்களைக் கைப்பிடித்து அழைத்துச் செல்ல அரசின் திட்டங்கள் இருப்பதை எடுத்துக் கூறுங்கள்.**

**கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்பதை உறுதி செய்வோம்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.